## வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

**2018–ம் ஆண்டு மே மாதம் 28–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் நகல்கள்**

**தீர்மானம் எண் : 111 / 2018, நாள் : 28.05.2018**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 6வது மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.05.2018ம் தேதி கோரப்பட்டத்தில் பொது ஏலத்தில் திரு. டி. அருண்குமார்,த/பெ. தங்கம், 35, தேவி நகர், மதுரை என்ற ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டதால் மேற்படி ஒரு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்றத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு வருட ஒப்பந்த புள்ளி கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | தங்கம், 135, தேவி நகர், திருப்பரங்குன்றம், மதுரை | 4,49,500/- |
| 2 | வி. சுப்பிரமணியன், த/பெ. வையாபுரி, 16சி, எருமைகாரர் தெரு, திண்டுக்கல் | 4,60,000/- |
| 3 | எம். பார்வதி, க/பெ. வி. மாரியப்பன், 8/2 எ, நாச்சம்மாள் லேஅவுட், டி.வி.பட்டினம், உடுமலைப்பேட்டை. | 5,10,800/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் திருமதி. எம். பார்வதி, க/பெ. வி. மாரியப்பன், என்பவர் மற்றவர்களை விட உயர்ந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்துள்ளார்.

மேற்படி பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு 2017–18ம் ஆண்டு ஏலம் கோரப்பட்டத்தில் போட்டியின் அடிப்படையில் அதிக பட்ச தொகை கோரிய திரு. பி. பழனிசாமி என்பவர் தன்னால் தொடர்ந்து மேற்படி கட்டண கழிப்பிடத்தை நடத்த இயலாது என தெரிவித்து கழிப்பிடத்தை 31.03.2018 நகராட்சி வசம் ஒப்படைத்தார். இந்நிலையில் மேற்படி கட்டண கழிப்பிடத்திற்கு 5 ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெற்றத்தில் 3வது மற்றும் 4வது ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டனர். எனவே எதிர் கேள்வி கோர ஆள் இல்லாததால் ஏலம் தள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில் 2017-2018ம் ஆண்டு ஏலத் தொகை ரூ.6,37,00/–ம், 2016-17–ல் ரூ.3,57,761/–ம், 2015-16ல் ரூ.3,40,725/–ம் வசூல் செய்யப்பட்டது. தற்போது கோரியுள்ள அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகையை விட கடைசி ஆண்டு வசூல் செய்த குத்தகை தொகை அதிகமாகும். அதே நிலையில் தற்போது கோரியுள்ள அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை 3 ஆண்டின் சராசரி தொகை (ரூ. 6,37,000+3,57,761+3,40,725=ரூ.13,35,486/3 =ரூ.4,45,162/)– விட அதிகமாகும் என்பதால் உயர்ந்த பட்ச ஒப்பந்த கேள்வி தொகை இறுதி செய்தது குறித்த மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 5 முறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரியும் மேற்படி ஏலம் தீர்வு பெறாததாலும் தற்போதைய உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை கடந்த 3 ஆண்டின்

சராசரியைவிட கூடுதலாக உள்ளதாலும் உயர்ந்த பட்சமாக திருமதி. எம். பார்வதி, க/பெ. வி. மாரியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகையை மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.2032/2017/அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 112 / 2018, நாள் : 28.05.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள **03.05.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | புதுப்பை அமராவதி குடிநீர் திட்ட குழாய்கள் பழுது பார்த்தால் | 75,000/- | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.95 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.55 % அதிகமாக |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 113 / 2018, நாள் : 28.05.2018</u>**

2016-17ம் நிதியாண்டிற்கான வெள்ளகோவில் நகராட்சி தணிக்கை குறிப்பு பத்தி எண். 39-ல் 2016-17ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ. 45,605 /- செலுத்த தடை எழுப்பப்பட்டுள்ளது. 2016-17 தணிக்கைக் கட்டணம் உரிய தலைப்பில் அரசுக்கணக்கில் ரூ. 45605 /- கரூவூலத்தில் செலுத்தியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 142/2017/அ2)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 114 / 2018, நாள் : 28.05.2018</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று வருடம் மற்றும் ஒன்பது வருட குத்தகை இனங்களுக்கு 10.04.2018 மறுஏலம் வரவேற்று அறிவிப்பு விளம்பரம் தினசரி நாளிதழில் வெளியீடு செய்து வழங்க கோரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டதன்படி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருப்பூர் அவர்களின் வெ.ஆணை.எண்.75/2018/செமதொ/2018 நாள்.27.03.2018ன்படி தினகுரல் தினசரி நாளிதழில் புதுச்சேரி பதிப்பு நாள். 29.03.2018ல் பக்கம் எண்.4ல் வெளிவந்தமைக்கு பட்டியல் தொகை ரூ.46,080/-(பட்டியல் எண்.3658/29.04.2018) கோரி குனகுரல் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2032/2018/அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 115 / 2018, நாள் : 28.05.2018</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண். 4 மற்றும் 8, வாரச்சந்தை முகப்பு கடை எண். 4 மற்றும் 8, தீத்தாம்பாளையம் வணிக கடை எண். 1,2,3 மற்றும் 4 ஆகிய 8 கடைகளுக்கு கடந்த ஆறுமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும், மேற்படி ஒப்பந்தபுள்ளி விளம்பரத்தை இரண்டு முறை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தும், குத்தகைதாரர்கள், ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பியும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்து ஒருவரும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளாதது குறித்து விசாரிக்கப்பட்டதில் ஏலத்தொகை, வைப்புத்தொகை மற்றும் சால்வன்சி தொகை அதிகமாக உள்ளதாக தெரிவித்தனர். மேலும் ஏற்கனவே ஒன்பதாண்டு கடை குத்தகை முடிந்து மீண்டும் உரிமம் புதுப்பித்துள்ள குத்தகைதாரர்கள் தற்போது கடை வாடகை உயர்த்தப்பட்ட நிலையில் மீண்டும் கூடுதல் வைப்புத்தொகை செலுத்துவது மிகவும் சிரமமாக உள்ளதாக தெரிவித்து வைப்புத்தொகை குறைக்க கோரியுள்ளதன் பேரில் குத்தகை உரிமம் புதுப்பித்தவர்களுக்கும் சேர்த்து கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை குறைத்து நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | கடைகள் | தற்போதைய வைப்புத்தொகை | குறைக்கப்படும் வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடைகள் | 50,000 | 25,000 |
| 2 | வாரச்சந்தை முகப்பு கடைகள் | 30,000 | 15,000 |
| 3 | தீத்தாம்பாளையம் வணிக வளாக கடைகள் | 10,000 | 5,000 |

**<u>அலுவலக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2032/2017/அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 116 / 2018, நாள் : 28.05.2018</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு **27.12.2016–ல்** ஏலம் கோரப்பட்டு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய திரு.பி.சுப்பிரமணியன், த/பெ பழனிச்சாமி கரூர் என்பவருக்கு **2017–18** முதல் **2019–2020** வரை மூன்றாண்டுக்கு மேற்படி குத்தகை வசூல் செய்ய மன்ற அனுமதி பெற்று உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் **2018–2019** ஆண்டுக்கான குத்தகை தொகை **31.03.2018** –ற்குள் செலுத்தக் கோரியும் நாளது தேதி வரை தொகை செலுத்தாததரல் **01.06.2018** முதல் நகராட்சி மூலம் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

(நக.எண்0578/2018/அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 117 / 2018, நாள் : 28.05.2018</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7232 / 2014 / ஆர்1, நாள். 15.03.2018–ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி)க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி அரசு கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுய நிதி, பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கும் சொத்துவரி விதிப்பு செய்யப்பட வேண்டுமென சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளதால், 2017-18ஆம் இரண்டாம் அரையாண்டிலிருந்து

குடியிருப்பு கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கப்படும் என்ற அறிவிப்பினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3) இன்படி ஆட்சேபணை ஏதும் இருப்பின் நகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்க ஏதுவாக தமிழ் நாளிதழில் 10.04.2018 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்கண்ட காலக்கெடுவில் ஆட்சபேணை எதும் வரப்பெறவில்லை என்பதால், வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுய நிதி, பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கும் குடியிருப்புக்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்திலிருந்து 1 .5 மடங்கு சொத்துவரி விதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 685 / 2018 / அ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 118 / 2018, நாள் : 28.05.2018</u>**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 12503 / 2018 / ஆர்1, நாள். 21.05.2018–ல் 1999-ம் ஆண்டின் தொழில்வரிச் சட்டம் விதி 16-ன்படி 01.10.2018ல் துவங்கிய அரையாண்டு முதல் ஐந்தாண்டுக்கு ஒருமுறை 35%-க்கு மிகாமலும், வருடம் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ. 2500 /-க்கு மிகாமலும் தொழில்வரியினை நகர்மன்றம் உயர்த்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேலும் 01.10.2018 முதல் தொழில்வரியினை உயர்த்திடவும் விதி 17-ன்படி இதனை விளம்பரப்படுத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வெள்ளகோவில் நகராட்சியில் கீழ்கண்ட அட்டவணைப்படி தொழில்வரி அமுலில் இருந்து வருகிறது.

| வ. எண் | அரையாண்டு வருமானம் | பழைய அரையாண்டு தொழில்வரி | 01.10.2018 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொழில்வரி |
|---|---|---|---|
| 1 | ரூ. 21,000/– வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ. 21,000/– முதல் ரூ. 30,000/- வரை | ரூ. 130.00 | ரூ. 165.00 |
| 3 | ரூ. 30,000/– முதல் ரூ. 45,000/- வரை | ரூ. 300.00 | ரூ. 375.00 |
| 4 | ரூ. 45,000/– முதல் ரூ. 60,000/- வரை | ரூ. 590.00 | ரூ. 740.00 |
| 5 | ரூ. 60,000/– முதல் ரூ. 75,000/– வரை | ரூ. 890.00 | ரூ. 1115.00 |
| 6 | ரூ. 75,000/– மற்றும் அதற்கு மேலும் | ரூ. 1180.00 | ரூ. 1250.00 |

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்கவும், இந்நகராட்சியின் நிதி நிலையினை உயர்த்திடும் பொருட்டும் தொழில்புரிவோர், வணிகர், அலுவலகத்தில் பணிபுரிவோர் உள்ளிட்ட அனைவருக்கும் மேற்கண்டவாறு அமலில் இருந்து வரும் தொழில்வரிக்கான அட்டவணை விவரப்படியான வரியிலிருந்து 25% உயர்த்தியும் வருடம் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ. 2500 /–க்கு மிகாமலும் 01.10.2018 முதல் உயர்த்தி வசூலித்திட மன்றம் அனுமதிக்கலாம். இதனை உரியவாறு விளம்பரப்படுத்திடவும், மாவட்ட அரசிதழில் வெளியிடவும் இதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1047 / 2018 / அ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 119 / 2018, நாள் : 28.05.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் உள்ள கேனான் ஜெராக்ஸ் மிசின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ஹிந்துஸ்தான் ஆட்டோ மேசன், கோயம்புத்தூர் நிறுவனத்தில் சப்ளை செய்யப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி ஜெராக்ஸ் மிசினில் டோனர் கேட்ரேஜ் தீர்ந்துவிட்டதால் பிரிண்ட் எடுக்க இயலாமல் உள்ளது. எனவே 2018-2019ம் ஆண்டிற்க்கு தேவையான ஜெராக்ஸ் மிசின் டோனர் கேட்ரேஜ் உத்தேச மதிப்பீடு ரூ. 60,000 /—க்கு வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலக்குறிப்பு</u>**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ஹிந்துஸ்தான் ஆட்டோ மேசன் நிறுவனத்தில் வாங்கி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1321/ 2017 / இ1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 120 / 2018, நாள் : 28.05.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட செம்மாண்டம்பாளையம் பொதுக்கிணற்றில் மின்மோட்டார் வைத்து தண்ணீர் விநியோகம் செய்யும் மின்மோட்டர் அறை மிகவும் பழுதடைந்து இடிந்து வரும் நிலையில் உள்ளது. இதனால் மின்மோட்டார் இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இதனை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 95,000 /— ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 94 / 2018 / இ1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 121 / 2018, நாள் : 28.05.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பணி வாகனம் வண்டி எண். TN 42 V 3812 வாகனம் 17.06.2018-ம் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறவும், வண்டியில உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பெயிண்டிங் வேலைகள் மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 90,000 /—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1085/2018/ஹெச்1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. இ. ஷாஜஹான்**
**தனி அலுவலர் /**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**
**திருப்பூர் மாவட்டம்**